# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 52/மா/2023**

**நாள்: 03.05.2023**

திரு. சுப்பையா,
தூத்துக்குடி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி
தூத்துக்குடி – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, செல்வீஜர் முதல் தெரு, கதவு எண். 7M என்ற முகவரியில் வசிக்கும் திரு. சுப்பையா என்பவரின் 27.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.03.2023 ல் பெறப்பட்டு 52/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, செல்வீஜர் முதல் தெரு, கதவு எண். 7M என்ற முகவரியில் வசிக்கும் திரு. சுப்பையாஎன்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 27.02.2023 நாளிட்ட தனது மனுவில்:

" I joined Municipal service on 02.03.1961 and served as an Assistant Clerk till my retirement on 31.07.2000. I started contributing for under the P.F. scheme with effect from 27.11.1965. I was contributing a portion of my salary towards PF. from 1965. I understand that the High Court had directed the Corporations and Municipalities to pay interest to their employees on the PF deducted from the employees. Many influential staff have collected the interest due to them. I submitted several applications and visited the office on several days and there is no response. I also approached the office of the Corporation and the only reply give was "wait". I was told that one Dr.Nalini Thompson who was working in the Corporation and retired was also following up her demand for payment of interest on P.F. and that my request also has been clubbed to that file. I was also told that the claim of many other had been clubbed in that file and that I will be paid interest when Dr. Nalini Thompson is paid.

Now I understand that pursuant to the orders of this Hon'ble Ombudsman by order No.260 of 2022 dated 19.01.2023, that the said Dr.  has been paid.  But unfortunately my claim has not been processed, apparently for want of an order from your goodself.

I submit that the AD of local fund, by his letter dated 17.12.2020 has informed that interest had been sanction even in 2011 and informed that we can approach the Tuticorin Municipal Corporation Commissioner.  In the said letter he also directed the Municipal Commissioner to take immediate and prompt action for payment of interest due and marked a copy to the Municipal Commissioner.  But there was no response.

Finally in response to an application under the RTI Act the respondent corporation gave out " தங்கள் விண்ணப்பம் (பல விண்ணப்பங்களுடன்) இணைக்கப்பட்டு வட்டி கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது"

Now it is more than 22 months since the said reply.  When I approached and enquire with the municipal corporation some time back they inform me that my application will be processed along with that of Dr.Nalini Thompson.  But I have not received the payment till today though Dr.Nalini Thompson has been paid finally I sent a reminder petition dated 22.02.2023 to the Corporation and there is no response for that too.

I am now running 82 years and I have age related helath issues and hence I can not appear before you in person for a personal hearing in any place other than Tuticorin.  Hence personal hearing may be dispensed in the event of hearing any place other than Tuticorin appropriate orders may be passed on the merits of my case as stated above.

I request you to pass appropriate orders and directions to enable me to get the relief. Viz. interest of my P.F. contribution as early as possible " என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 07.03.2023 நாளிட்ட கடிதம் மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 17.04.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" தூத்துக்குடி மாநகராட்சியில் உதவியாளராக பணியாற்றி 31.07.2000ல் ஓய்வு பெற்ற திரு S.சுப்பையா என்பவருக்கு அந்தந்த வருடத்திற்கு அரசால் ஆணையிடப்பட்ட வட்டிவிகிதத்தில் வருடவாரியாக இம்மாநகராட்சியால் அலுவலக இருப்பில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில்தான் சேமநலநிதி கணக்கில் தனியர் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை கணக்கிட்டு வட்டித்தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனுதாருக்கு 1984 முதல் ஓய்வுபெற்ற நாள் 31.07.2000 வரை வழங்க வேண்டிய சேமநலநிதி வட்டித்தொகை ரூ.22,210/- ஆகும். மேலும் அன்னாருக்கு வழங்க வேண்டிய வட்டித்தொகை கணக்கீடு செய்யப்பட்டு கணக்கீட்டுத்தாள் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று இவ்வறிக்கை வாயிலாக கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 19.04.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 11.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 14.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" நான் எனது மனுவில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி 81 வயது நிரம்பிய மூத்த குடிமகன். நான் 1961ம்ஆண்டு முதல் 31.07.2000ம் தேதி வரை தூத்துக்குடி நகராட்சியில் பணிபுரிந்து எனக்கு வரவேண்டிய முழு பலாபலன்கள் கடந்த 23 ஆண்டுகள் ஆகியும் கிடைக்காமல் அலைக்கழிக்கப்பட்டேன். எனது உடலும் உள்ளமும் உருகி எனது வயோதிகத்தின் நிமித்தம் நான் நலிவடைந்துவிட்ட இந்த நிலமையில் சுமார் 120 கி.மீ. பயணம் செய்து நாகர்கோவில் வந்து விசாரணைக்கு ஆஜர் ஆவது இயலாத காரியம் ஆகிவிட்டது. ஆகவே நான் நேரில் ஆஜர் ஆக வேண்டும் என்ற உத்தரவு படி ஆஜர் ஆகாததை மன்னித்து எனது இந்த எழுத்துமூல சமர்பணத்தை ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். மேலும் தனது சமர்பணத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள அநீதியை சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் என் ஊதியத்தில் பிடிக்கப்பட்ட P.F. தொகைக்கு வட்டி கொடுக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதனடிப்படையில் நிதி தணிக்கை இயக்கம் 2011ம் ஆண்டிலேயே வட்டி வழங்கிட நகராட்சியை அனுமதித்துள்ளது. அதனடிப்படையில் நகராட்சியில் ஒரு கோப்பு ஆரம்பிக்கப்பட்டு எல்லாம் ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்களுக்கும் அந்த ஒரே கோப்பில் வட்டி கணக்கிடப்பட்டு வருவதாக நகராட்சி அதிகாரிகள் கூறிவந்தனர். நகராட்சி அதிகாரிகள் மேலே கண்ட மருத்துவர் Dr.நளினி தாம்ஸன் அவர்களுக்கு வட்டியை நாங்கள் செட்டில் செய்யும் சமயம் எல்லா ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் செட்டில் செய்து விடுவோம் என்று கூறி வந்தார்கள். பலருடைய கோப்புகளுடன் எனது வட்டியும் சேர்த்து கணக்கிடப்பட்டு வருவதாலும், அதை காரணம் காட்டி தகவல் தர நகராட்சி அலுவலகம் மறுத்து வருவதாலும் நான் தங்களிடம் பரிகாரம் கேட்டு வந்திருக்கிறேன். ஆகவே இந்த எனது சமர்பணத்தை நேரில் நான் தங்கள் முன் சமர்பணம் செய்த சமர்பணமாக கருதி ஏற்றுக்கொண்டு பரிகாரம் வழங்கிட உத்தரவு பிறப்பிக்க பிரார்த்திக்கிறேன். மறுபடியும் நேரில் ஆஜராக முடியாதநிலைமையை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்த நிலையில் மனுதாரர் 19.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

5) தூத்துக்குடி மாநகராட்சி கணக்கு அலுவலர்19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

" தூத்துக்குடி மாநகராட்சியில் உதவியாளராக பணியாற்றி 31.07.2000ல் ஓய்வு பெற்ற திரு S.சுப்பையா என்பவருக்கு அந்தந்த வருடத்திற்குரிய அரசால் ஆணையிடப்பட்ட வட்டி விகிதத்தில் வருடவாரியாக மாநகராட்சியில் அலுவலக இருப்பில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் வட்டித்தொகை கணக்கீடு செய்து மனுதாரருக்கு வழங்கப்பட்டது. 1984ம் ஆண்டு முதல் 31.07.2000 வரையிலான காலத்திற்கு மனுதாரருக்கு சேர வேண்டிய வட்டித்தொகை ரூபாய் 22,210/– மாநகராட்சியால் இன்னும் வழங்கப்படவில்லை. மேற்கண்ட மனுதாரர் மற்றும் அவரைப்போன்ற உள்ளோருக்கான வட்டித்தொகை கணக்கீடு தனியார் ஏஜன்சி மூலம் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. எனவே மனுதாரருக்கு சேர வேண்டிய மேற்கண்ட வட்டித்தொகை இன்னும் ஒரு வார காலத்தில் வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் 17.04.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனுக்கள், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி கணக்கு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மனுதாரர் தனது ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கு வட்டித்தொகை வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு " 12 (1) " The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

12 (d) order other necessary remedial measures considering the facts and circumstances of the case; அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

" தூத்துக்குடி மாநகராட்சியில் உதவியாளராக பணியாற்றி 31.07.2000ல் ஒய்வு பெற்ற திரு. S. சுப்பையா என்பவருக்கு அந்தந்த வருடத்திற்கு, அரசால் ஆணையிடப்பட்ட வட்டி விகிதத்தில் வருடவாரியாக மாநகராட்சியில் அலுவலக இருப்பில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் வட்டித்தொகை கணக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. 1984ம் ஆண்டு முதல் 31.07.2000 வரையிலான காலத்திற்கு மனுதாரருக்கு சேரவேண்டிய வட்டித்தொகையான ரூபாய் 22,210/- மாநகராட்சியால் இன்னும் வழங்கப்படவில்லை. மேற்கண்ட மனுதாரர் மற்றும் அவரைப்போன்ற உள்ளோருக்கான நிலுவையில் உள்ள வட்டித்தொகை கணக்கீடு தனியார் ஏஜென்சி மூலம் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. எனவே, மனுதாரருக்கு சேர வேண்டிய மேற்கண்ட வட்டித்தொகை இன்னும் ஒரு வார காலத்தில் வழங்கப்படும் என்பதை மாநகராட்சியின் கணக்கு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி அவர்கள் அறிக்கையில் எவ்வளவு நாட்களுக்குள் மனுதாரருக்கு வழங்கப்படும் என குறிப்பிடவில்லை. இது வன்மையாகக்கண்டிக்கத்தக்கது. மாநகராட்சி அலுவலர் வாக்குமூலத்தில் தெரிவித்தபடி ஒரு வார காலத்திற்குள் வழங்கிட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தியும், சேமநலநிதி வட்டித்தொகை உரிய காலத்தில் வழங்காததற்கு காரணமான சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களிடமிருந்து காலதாமத வட்டித்தொகையினைவசூலிக்கப்பட வேண்டும் எனவும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

This kind of delay in settling the interest dues to aged senior retired officials of the Corporation in their late 70s' and early 80s' is censured and condemned by this Forum. This shows the tyrannical and inhuman approach of the Corporation officers towards the retired employees without any thought of their own future when they will necessarily superannuate, get older and wait for Government monetary benefits at the hands of those who will be at the helm of administration then in the seat of the driver. The Commissioner himself has not committed on any date by which the dues to the petitioner would be settled. The DMA is directed to pull up the Commissioner, Thoothukudi Corporation for such uncharitable attitude towards a petitioner who is in his 80s'. This Forum orders recovery of interest from the Corporation officials who are responsible for this unethical, unjustified and unfair delay in the disbursement of interest arrears at the rate fixed by Government for such administrative lapses and

omissions and remit the amount to the pensioner petitioner. The DMA is directed to ensure compliance with the orders of this Forum by the Thoothukudi Municipal Corporation. An action taken reply should be sent to this Forum within 10 days positively.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு S.சுப்பையா,
எண். 7 M செல்வீஜர் முதல் தெரு,
துத்துக்குடி–2.

2)ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.

3)நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4)இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.